பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 163 நாள் : 09.07.2025

**மெரினா நீச்சல் குளத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், 11.07.2025 முதல் 31.07.2025 வரை (20 நாட்கள்) இயங்காது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-114க்குட்பட்ட மெரினா நீச்சல் குளத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு மையம் தங்குதடையின்றி இயங்க ஏதுவாக, 135 மீ. Backwash Pipe அமைத்தல், 1.80 மீ. விட்டம் கொண்ட 9 ஊறுகுழிகள் (Soak Pits) பொருத்துதல், சோதனை வெள்ளோட்டம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் பணிகளுக்காக மெரினா நீச்சல் குளம் 11.07.2025 முதல் 31.07.2025 வரை (20 நாட்கள்) இயங்காது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.